முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1340

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.05.2023,** புதன்கிழமை

1. ஞானிகள் பலம் கொண்ட அரங்கனே
ஞானவான்தனை உலகமெங்கும் படைக்க
கனிவேலவன் என் சக்தியாக
கருணைகொண்டு இயங்குகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 17 ம் நாள், 31.05.2023, புதன்கிழமை)
வரமென உன்வழி உலகமக்கள்
வணங்கி ஞானம் பயின்றுவர
3. வருவோர்க்கு இனிதே எந்தன் அருள்
வல்லமையான வரமாக நிரம்பி நின்று
கனிவேலவன் எனை காணும் காட்சியோடு
கருணைபட இந்த கலியில் இனி பிறவாத
4. பிறவாத பெரும்பேறுதானடைய
பிரணவ சித்தியாக உன்வழி ஆற்றல்கூடும்
கூடவே அரங்கன் உன்
குறையில்லா தர்மத்தை
5. நாடெங்கும் மக்கள் செய்துவர
ஞானதர்ம யோகஞான ஆட்சி
ஆட்சியதும் அரங்கன் நீ விரும்புகின்ற வண்ணம்
ஆற்றல்பட உலகம் கண்டு தேறும்
6. தேறவே அரங்கனின் தொண்டர்கட்கு
தெய்வீக சக்தி ஆறுமுகன் யான்
வரமாக இனிவரும் காலம் தந்து
வையகத்தில் ஞானத்தை பெருக்கி வர
7. வருகவே தொடர்ந்து அரங்கன் பேரில்
வல்லமைபட எங்கெல்லாம் தர்மம் நடத்துகின்றனரோ
நடத்துகின்ற மாந்தர் அவரவர்க்கும் ஞான ஆட்சிக்காலம் தன்னில்
தடையற பதவி சுகயோகங்கல் பழுதில்லா சேவையாற்றும் பாக்கியங்கள்

8. பாக்கியங்கள் கூடி அவரவரும்
பாடிடுவேன் அரங்கனோடு அரங்கனாக
வரம்கூடி இனிதே ஞானிகளாக
வையகத்தில் சிறந்தோங்க நேருமப்பா
அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—